**BESE-046**

# BACHELOR OF EDUCATION (B.Ed.)

## Term-End Examination

## June, 2022

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

---

**கவனிக்கவும் :**

*(i)* அனைதது வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(அ) தொடக்க நிலை வகுப்புகளில் வாய்மொழிப் பயிற்சி சிறப்பிடம் பெறுவதேன் ? இந்நிலைக்கு எற்ப கற்பிக்கும்

முறைகள் யாவை ? அவற்றை மொழிப்பாடம் கற்பித்தலுக்கு நீவீர் எவ்வாறு கையாள்வீர் ?

**(அல்லது)**

(ஆ) படித்தல் என்றும் திறனை வரையறை செய்து அத்திறனால் நிறைவேறக் கூடிய நன்னோக்கங்களை விவரிக்க ?

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும் :

(அ) தமிழ் கற்பித்தலில் விளையாட்டு முறையை எவ்வாறெல்லாம் பயன்படுத்துப்வீர் என்பதை விளக்குக. இதன் நிறைகுறைகள் யாவை.

**(அல்லது)**

(ஆ) நுண்நிலைக் கற்பித்தல் என்றால் என்ன ? இத்திறனை ஏன் மாணாக்கர்களிடம் உருவாக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட திறன்களில் ஏதாவது ஒன்றறுக்கு நிகழ்வு (Episode) ஒன்றைத் தருக.

**3.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் ***நான்கு*** (4) வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும் :

(a) செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை.

(b) எழுதக் கற்பிக்கும் முறைகளைக் கூறுக ?

(c) நல்ல வினாக்களின் பண்புகளை எடுத்துரைக்க.

(d) இலக்கணம் கற்பித்தலுக்டு விதிவரு முறையே சிறந்தது-தக்க காரணம் காட்டி நிறுவுக.

(e) துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களை எடுத்துனரக்க.

(f) கடிதத்தின் வகைகளை வரிசைப்படுத்தி மாணவர்க்குக் கடிதம் எழுதும் கலையைக் கற்பிக்கும் படிநிலைகளை விளக்குக.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

“அருளைப்பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு
அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியேன்றே போற்று.”

(a) இப்பாடலை எங்ஙனம் அறிமுகப்படுத்துவீர்கள் உதாரணத்துடன் விளக்குக.

(b) மாணவர்கள், பொருளை உணர்ந்து கொண்டார்களா என அறிய, நீங்கள் விடுக்கும் மூன்று வினாக்களையும் அதற்கான விடைகளையும் எழுதுக.